



தமிழ்நாடு அரசு

## வேளாண்மைப் பொறியியல் துறை

# ஆதி திராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு மானியத்தில் கிணறுகள் அமைத்து மின் மோட்டாருடன் நுண்ணீர்ப்பாசனம் அமைத்துத் தரும் திட்டம்

தமிழ்நாட்டில் பாசன நீர் ஆதாரங்களை புதிதாக உருவாக்கி, அதிக பரப்பில் சாகுபடி மேற்கொண்டு, விவசாயிகள் அதிக விளைச்சல் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

ஆதி திராவிட, பழங்குடியின விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் ஆழ்துளை அல்லது குழாய் கிணறுகள் மின் மோட்டாருடன் நுண்ணீர்ப் பாசன வசதி கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அமைத்துத் தரப்படுகிறது.



**ஆழ்துளைக் கிணறு அமைத்தல்**

**சிறப்பம்சங்கள்**

- நில நீர் ஆய்வின் அடிப்படையில் குழாய் கிணறு அல்லது ஆழ்துளை கிணறு அமைத்தல்.
- நீரினை இறைப்பதற்கு மின்சார சக்தி மூலம் இயங்கக்கூடிய பம்பு செட்டுகள் நிறுவுதல்.
- பாசன நீரினை வீணாக்காமல் நுண்ணீர் பாசன அமைப்புகளை நிறுவி சாகுபடி பரப்பினை அதிகரித்தல்.

**தகுதி வரம்பு**

- ஆதி திராவிட, பழங்குடியின பிரிவினைச் சார்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகள்

- நிலத்தடி நீர் பாதுகாப்பான குறுவட்டங்களில் மட்டுமே செயல்படுத்தப்படுகிறது.
- வருவாய்த் துறையின் மூலம் வழங்கப்பட்ட சாதி சான்றிதழ்
- பிரதம மந்திரி வேளாண் நீர் பாசன திட்டம் – ஒவ்வொரு வயலுக்கும் நீர் –நிலத்தடி நீர் பாசனம் என்ற திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின் படி செயல்படுத்தப்படுகிறது.

**செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்**

அரியலூர், செங்கல்பட்டு, கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் தேனி ஆகிய 8 மாவட்டங்களில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**மானிய விபரம்**

அரசு வெளியிட்ட ஆணையின்படி, 90 மீட்டர் ஆழம் உள்ள குழாய் கிணறு அமைப்பதற்கும், 100 மீட்டர் ஆழம் உள்ள ஆழ்துளை கிணறு அமைப்பதற்கும் அதிகபட்சமாக ரூ.3.00 இலட்சமும், மின்சார சக்தி மூலம் இயங்கக்கூடிய 5 குதிரைத்திறன் கொண்ட பம்பு செட்டுகள் அமைப்பதற்கு ரூ.75 ஆயிரமும், நீர் விநியோக குழாய்கள் அமைப்பதற்கு ரூ.20 ஆயிரமும், மின்சார சக்தி மூலம் இயங்கக்கூடிய இடங்களுக்கு மின்சார இணைப்புக்கான கட்டமைப்புகள் அமைத்திட ரூ. 2. 50 இலட்சமும் உச்சவரம்புத் தொகையாக மானியம் வழங்கப்படுகிறது.

**குறிப்பு**

அரசினால் நிர்ணயிக்கப்பட்ட ஆழத்திற்கும் அதிகமாக கிணறு அமைக்க வேண்டும் என்றாலோ அல்லது கூடுதல் குதிரைத்திறன் கொண்ட பம்புசெட்டுகள் நிறுவ வேண்டும் என்றாலோ, அதற்கான கூடுதல் செலவினை சம்மந்தப்பட்ட விவசாயிகளே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை பற்றி அறிந்துகொள்ள மற்றும் விண்ணப்பிக்க கீழ்க்கண்ட இணைய தளத்தில் பதிவு செய்திடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

https://mis.aed.tn.gov.in

https://aed.tn.gov.in

**மேலும் தொடர்புக்கு**

| | |
|---|---|
| தலைமைப் பொறியாளர் (வே.பொ).<br>வேளாண்மைப் பொறியியல் துறை,<br>எண். 487, அண்ணாசாலை, நந்தனம்,<br>சென்னை – 600 035.<br>தொலைபேசி எண்: 044-29510822<br>இமெயில்– aedcewrm@gmail.com, | சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர் (வே. பொ) மற்றும் உதவி செயற்பொறியாளர் (வே. பொ) |